# வெளிநாட்டு வேலைவாய்ப்பும் பொருளாதார வளர்ச்சியும்: இலங்கையை அனுபவமாகக் கொண்ட நடத்தைசார் பகுப்பாய்வு

**முஹம்மது அஸ்லம், ஏ.எல்.**

***Abstract***

*Nowadays, foreign employment has emerged as a solution for the unemployment crises, the need of foreign exchanges and economic growth for developing countries. This study intends to find out the behavioral relationship between the foreign employment and economic growth of Sri Lanka. To test this relationship, the time series data were considered during the period of 1977 to 2014. While the remittances of foreign employment were exploited as explanatory variable and the gross domestic product in constant price was considered as explained variable. In this study, the multiple regression model was used to test the relationship between dependent and independent variables. According to this model the R-squared was 0.99 and its Durbin Watson test statistic was 1.198, therefore this model was fitted very well. In the meantime the coefficient of the foreign employment factor in the estimated model was 0.834510 and its 't' statistic was 16.743 (0.000), therefore this factor was significantly impacted on the dependent variable. Finally this study concluded that the foreign employment had positive behavioral relationship on the gross domestic product of Sri Lanka.*

***Keywords:*** *Foreign Employment, Economic Growth, Tourism Earnings, and Colombo Consumer Price Index*

## அறிமுகம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறைகளான பெருந்தோட்டக் கைத்தொழிற்துறை, சுற்றுலாத்துறை, ஆடை ஏற்றுமதி, வெளிநாட்டு நேரடி முதலீடு என்பவைகளை விஞ்சும் அளவுக்கு ஒரு முக்கிய துறையாகக் காணப்படுகின்றது. 1977ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் திறந்த பொருளா தாரக் கொள்கை அமுல்படுத்தப்பட்ட பின்னர் அதிகரித்த வேலையின்மை யினைக் குறைப்பதற்கும் அந்நியச் செலாவணி வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்குமான ஒரு மூலோபாயப் பொறிமுறையாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு இனங்காணப்பட்டு அது ஊக்குவிக்கப்பட்டது. இதனால் கவரப்பட்ட மக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இலங்கையிலிருந்து வருடாவருடம் மத்திய கிழக்கு நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தொழிலுக்காக குடிபெயர்கின்றனர். 2012ம் ஆண்டு மொத்த ஊழியப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு 24 சதவீதமாகக் காணப்பட்டதுடன் இலங்கை மக்களில் மூன்றில் ஒரு குடும்பம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலமான வருமானத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலைமை யையும் இவ்வேலைவாய்ப்பு தோற்று வித்துள்ளது. மேலும், சராசரியாக வருடாந்தம் 230,000 பேர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்காக குடிபெயர்கின்றனர் (Aslam and Jesmy, 2014).

வெளிநாட்டு வேலைவாய்ப்பு 1960களிலிருந்து இலங்கையின் பொருளா

தாரத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்திவருகின்றது. ஏனெனில் 1970 களில் தேயிலை ஏற்றுமதி மூலம் உழைத்துக் கொள் ளப்பட்ட அந்நியச் செலாவணிச் சம்பாத்தியங்களை 1980 களின் நடுப் பகுயில் ஆடைக் கைத்தொழில் கையகப்படுத்திக் கொண்டது. இந் நிலையில்தான் வெளிநாடுகளில் தொழில் செய்யும் இலங்கையர்களின் பணவனுப்புதல்கள் இலங்கையின் அந்நியச் செலாவணி வருமானத்தில் ஒரு பிரதான பங்களிப்பினை வழங்கிய தனுடாக பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலளிக்கும் ஒரு முக்கிய துறையாக இனங்காணப்பட்டது. 1983 இல்வெளிநாட்டு தனியார் பணவனுப் புதல்கள் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 27% ஆகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 37% ஆகவும் காணப்பட்டது. இது 2013 ஆம் ஆண்டளவில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 61.5% ஆகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60.7% ஆகவும் அதிகரித்துக் காணப்பட்டது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2013).

பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்படுகின்ற நீண்டகால அதிகரிப்பினைக் குறிப்பிடுகின்றது. அதாவது, ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுதல் பொருளாதார வளர்ச்சி எனப்படும் (Aslam and Ahamed Lebbe, 2015).இதனை நிலையான விலைகளில் கணிப்பிடப் பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மூலமும், மெய்த்தலா வருமானத்தின் வருடாந்த வளர்ச்சி மூலமும் கணிப்பிட்டுக் கொள்ளலாம். அந்தவகையில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது 1983ம் ஆண்டு காலப்பகுதியில் 6.9% ஆகவும் 2013ம் ஆண்டு காலப்பகுதியில் 7.6% ஆகவும் வளர்ச்சியடைந்து காணப்பட்டது (மத்திய வங்கி ஆண்டறிக்கை, 2013).

பொருளாதார வளர்ச்சியானது விவசா யத்துறை, கைத்தொழிற்துறை மற்றும் சேவைகள் துறைகளில் ஏற்படுகின்ற உற்பத்தி அதிகரிப்பினை வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தோடு கூட்டும்போது கிடைக்கப்பெறும் என Sarvananthan (2005) குறிப்பிடுகின்றார். இங்கு தேறிய காரணி வருமானம் என்பதனுள் வெளிநாட்டு வேலை வாய்ப்பின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பெறுகைகளும் உள் ளடக்கப்படுகின்றன. எனவே, பொருளா தார வளர்ச்சி மீது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒரு தொடர்பினைப் பேணிவருவது இங்கு உறுதிப்படுத்தப் படுகின்றது. இந்நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இலங்கையின் பொரு ளாதார வளர்ச்சி மீது எவ்வாறான தொடர்பினைப் பேணுகின்றது என்பத னை அனுமானப் புள்ளிவிபரவியல் முறையில் மதிப்பிட்டுக் கொள்வது காலத்தின் தேவையாகவுள்ளது. ஏனெ னில், அனுமானப் புள்ளிவிபரவியல் முறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பனவற்றுக்கிடையில் காணப்படுகின்ற தொடர்பினை ஆய்வுக் குட்படுத்தும் போது எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர் பாக எதிர்வு கூறுதல் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான எதிர்கால ஆய்வுகளுக்கு இவ்வாய்வு பக்க துணையாக அமையும் என்பதனால் இவ்வாய்வு முக்கியத்துவ முடையதாகக் காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வுக் கட்டுரை அறிமுகம், ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வு முறையியல், முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு, பெறுபேறுகளும் கலந்து ரையாடலும் மற்றும் முடிவுரையும் சிபாரிசும் என வகைப்படுத் தப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான தொடர்புகள் கருத்தியல் வடிவாக விபரணப் புள்ளிவிபரவியல் முறையில் (Descriptive method) ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதேயன்றி அனுமான ஆய்வு வடிவில் (Inferential Research Method) இலங்கையை மையப்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக இன்று இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மீது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெருந்தோட்ட கைத்தொழில், ஆடை ஏற்றுமதி என்பனவற்றைத் தாண்டி மிகவேகமாக செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. எனினும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குமிடையில் ஏதாயினும் தொடர்பு காணப்படுகின்றதா? என்பது தொடர்பில் மிகவும் குறைவான செயல்நெறி ஆய்வுகளே (Empirical Studies) காணப்படுகின்றன. இவ்வாய்வுகளில் பெரும்பாலானவை பொருளியலளவை முறையைக் கையாண்டு மேற்கொள்ளப் படவில்லை. அதே வேளை வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையில் எவ்வித தொடர்பு காணப்படுகின்றது என்பதனைக் கண்டறிவது பொருளியல் கண்ணோட்டத்தில் ஆய்வுசார் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையிலான நடத்தைசார் தொடர்பினைக் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் என்ற பகுதியினுள் தரவுகளும் மாறிகளும், அலகு மூலச் சோதனை, பெறுமதியற்ற பிற்செலவுப் பொருத்துகை மற்றும் பொருளியியலளவை பிற்செலவு மாதிரியுரு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

- **தரவுகளும் மாறிகளும்**

1977 – 2014 ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட 38 வருடங்களுக்கான காலத்தொடர் தரவுகளைக் உள்ளடக்கியதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு நிலையான விலைகளில் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் இலங்கை பெற்றுக்கொண்ட மொத்த தனியார் மாற்றல்கள் என்பன இவ் ஆய்வின் பிரதான மாறிகளாகவும் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பன கட்டுப்பாட்டு மாறிகளாகவும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன அனைத்து தகவல்களும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

- **அலகு மூலச் சோதனை**

இவ்வாய்வில் கவனத்திற் கொள்ளப்பட்ட மாறிகளான நிலையான விலைகளில் கணிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட தனியார் மாற்றல்கள், சுற்றுலாத்துறை வருமானங்கள், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பன காலத் தொடர் தரவுகளைக் கொண்ட மாறிகளாகக் காணப்படுவதனால் இம் மாறிகளின் தரவுகளின் நிலைத்த தன்மையை பரிசோதனைக்கு உட்படுத்துவது இன்றியமையாததாகும்.

ஏனெனில் பொதுவாக காலத்தொடர் தரவுகள் நிலைத்த தன்மையில் இருந்து விலகிக் காணப்படுவதற்கான

வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. காலத்தொடர் தரவுகளின் நிலைத்த தன்மையை கவனத்திற் கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளது பெறுபேறுகள் பொருளற்றதாகக் காணப்படக்கூடும் என பொருளி யலளவை காலத் தொடர் கோட் பாடுகள் குறிப்பிடுகின்றன. இதனால் காலத்தொடர் பகுப்பாய்வில் கவனத் திற் கொள்ளப்படும் மாறிகளின் நிலை த்த தன்மை (Stationarity) சோதனை செய்யப்படுவது மிகவும் தேவைப் பாடுடையதாகக் காணப்படுகின்றது (Gujarati, 1995).

மாறிகளின் நிலைத்த தன்மை (Stationarity) யினை பரிசோதனை செய்வதற்காக இவ்வாய்வில் ஆக்மன்டட் டிக்கி – புல்லர் (Augmented Dickey – Fuller - ADF) பரிசோதனை முறை கவனத்திற் கெள்ளப்பட்டது. இப்பரிசோதனை முறையில் சூனியக் கருதுகோள் $H_0$: $\delta = 0$ஆகவும் மாற்றுக் கருதுகோள்$H_1$: $\delta \neq 0$ ஆகவும் காணப்படும் எனக் கருதுகோள் உருவாக்கப்பட்டு காலத்தொடர் தரவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக அலகு மூலச்சோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின்வரும் பிற்செலவுச் சமன்பாட்டில் அவை சரிபார்க்கப்பட்டது.

$$\Delta Y_t = \beta_0 + \delta Y_{t-1} + \beta_1 \Delta Y_{t-2} + \beta_2 \Delta Y_{t-3} + \dots\dots + \beta_p \Delta Y_{t-i} + u_t \quad \dots\dots (1)$$

சூனியக் கருதுகோளின் அடிப்படையில் $Y_t$ ஆனது அலகு மூலமாகவும், மாற்றுக் கருதுகோளின் அடிப்படையில் $Y_t$ ஆனது நிலைத்த தன்மையாகவும் காணப்படுகின்றது. எளிய இழிவர்க்க மதிப்பானின் “t” சோதனைப் புள்ளிவிபரங்களின் அடிப்படையில் ஆக்மன்டட் டிக்கி புல்லர் புள்ளிவிபரத்தில் $\delta = 0$ ஆகக் காணப்படும் இதனை மேலுள்ள சமன்பாடு காட்டுகின்றது.

- **பெறுமதியற்ற பிற்செலவுப் பொருத்துகை**

காலத்தொடர் தரவுகளில் பெரும்பாலானவை நிலைத்த தன்மையற்றவையாகக் (non stationarity) காணப்படுகின்றன. அத்துடன் அவை நிலையான இடை மற்றும் நிலையான நியம விலகலையும் கொண்டிருக்காது. எனவே இரு நிலைத்த தன்மையற்ற (non stationarity) காலத் தொடர் தரவுகளுக்கிடையில் பிற்செலவுத் தொடர்பினை ஏற்படுத்தும்போது அப்பிற்செலவு மாதிரியுரு (Regression Model) தன்னிணைவுத் தாக்கத்துக்கு உட்படுவதுடன் (Autocorrelation effect) பெறுமதியற்ற பிற்செலவுத் துணிவுக் குணகத்தினையும் (Dubious Regression’s coefficient) கொண்டு காணப்படும்.

பெறுமதியற்ற பிற்செலவுச் சமன்பாட்டில் $R^2$ > DW (Durbin Watson Value) ஆகக் காணப்படும். இவ்வாறு Dubious பிரச்சினை காணப்படுமாயின் குறித்த இரு காலத்தொடர் மாறிகளுக்கிடையிலான பிற்செலவுப் பொருத்துகை மதிப்பு வாய்ந்ததாகக் காணப்படமாட்டாது. மறுபுறம் $R^2$ < DW ஆகக் காணப்படுமாயின் குறித்த பிற்செலவுச் மாதிரியுரு பெறுமதிவாய்ந்ததாகக் காணப்படும்.

- **பொருளியியலளவை பிற்செலவு மாதிரியுரு**

இவ்வாய்வு நிலையான விலைகளில் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி $(GDP_t)$ மீது வெளிநாட்டு வேலைவாய்ப்பினால் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற மொத்த தனியார் பணவனுப்புதல்கள் $(FEE_t)$ எவ்வா றான நடத்தைசார் தொடர்பினைக்

(Behavioral Linkage)கொண்டுள்ளது என்பதனைக் கண்டறிந்து கொள்வதற் காக மேற்கொள்ளப்பட்டது. இதற்காக பின்வரும் கட்டுப்பாட்டு மாறிகளான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், சுற்றுலாத்துறை மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட வரு மானங்கள் என்பன கவனத்திற் கொள் ளப்பட்டன. இவ்வாய்வின் பிரதான மாறியாக வெளிநாட்டு வேலை வாய்ப்பின் மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட மொத்த தனியார் பணவனுப் புதல்களும் சார்ந்த மாறியாக மொத்த உள்நாட்டு உற்பத்தியும் காவனத்திற் கொள்ளப்பட்டன. இம்மாறிகளைத் தொடர்புபடுத்தி பிற்செலவுச் சமன்பாட் டினைப் பொருத்தியபோது அதற்கான பிற்செலவுச் சமன்பாடு பின்வருமாறு அமைந்து காணப்பட்டது. இங்கு கவனத்திற் கொள்ளப்படும் மாறிகளின் பெறுமதிகள் இயற்கை மடக்கைப் (Natural logarithm) பெறுமதிக்கு வடிவ மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

$$log\ GDP_t = \beta_1 + \beta_2 logFE_t + \beta_3 logCCPI_t + \beta_4 logTE_t + U_t \qquad \ldots\ldots\ldots\ldots..\ (2)$$

இங்கு:

$logGDP_t$: நிலையான விலைகளில் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மடக்கைப் பெறுமதி (இம்மாறி பொருளாதார வளர்ச்சிக்கு பதிலீட்டு மாறியாக பயன்படுத்தப் பட்டது).

$logFEE_t$: வெளிநாட்டு வேலை வாய்ப்பின் மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட மொத்த தனியார் பணவனுப் புதல்களின் மடக்கைப் பெறுமதி

$logCCPI_t$: கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மடக்கைப் பெறுமதி

$logTE_t$: சுற்றுலாத்துறை மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட வரு மானங்களின் மடக்கைப் பெறுமதி

$\beta_1, \beta_2$: பிற்செலவுக் குணகங்கள்

$U_t$: வழு உறுப்பு

பொருத்தப்பட்ட மாதிரியுருவின் உறுதித்தன்மையினை மதிப்பிட்டுக் கொள்வதற்காக மாதிரியுருவின் துணி வுக்குணகம் ($R^2$),F புள்ளிவிபரமும், டேர்பின் வட்சன் பெறுமதி என்பனவும் சாரா மாறிகளின் பொருளுண்மைத் தன்மையினை மதிப்பிட்டுக் கொள் வதற்காக மாறிகளின் குணகக்குறி,t இன் பெறுமதி மற்றும் மாறிகளின் நிகழ்தகவுப் பெறுமதி என்பன கவனத்திற் கொள்ளப்பட்டன

**முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு உலகப் பொருளாதாரங்களில் பல்வேறுவகை யான அதிசயங்களை நிகழ்த்தியு ள்ளன. அது தொடர்பில் உலகளாவிய ரீதியில் [Iqbal and Sattar,2005; Rahman et al.,2006; Siddique et al., 2010] பல்வேறு ஆய்வுகள் மேற் கொண்டிருந்தாலும் இலங்கையை மையப்படுத்திய செயலறிவாய்வுகள் (Empirical studies) மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அந்தவகையில் ஆய்வுத் தலைப்புடன் ஓரளவு ஒத்துப்போகக் கூடிய இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளை முன்னைய ஆய்வுகளின் மீளாய்வாக இவ்வாய்வு கவனத்திற் கொண்டுள்ளது.

சுவாமி (1983) வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் பண அனுப்பீடுகளின் போக்கனை அறிந்து கொள்வதற்காக 1970 – 1984ம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தொடர் தரவுகளை கொண்டு விபரணப் புள்ளிவிபரவியல் முறையில்

மேற்கொண்ட ஆய்வில் இலங்கையின் அந்நியச் செலாவணிச் சம்பாத்தியத் தில் வெளிநாட்டு தொழிலாளர்களின் பணவனுப்புதல்கள் ஒரு கணிசமான அதிகரிப்பினை பதிவு செய்துள்ள தாகவும் இவ்வாறு பண அனுப்புதல் களில் ஏற்படுகின்ற அதிகரிப்புகள் இலங்கையின் பொருளாதாரத்தினை உறுதிப்படுத்தவல்லன (stability) என வும் இவ்வாய்வில் குறிப்பிடுகின்றார்.

அத்தநாயக்க என்பவர் (1996)ம் ஆண்டு காலப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் குடிபெயர்வதனால் இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் எவை என்பதனை கண்டறிந்து கொள் வதற்காக 1986 – 1995ம் ஆண்டு காலப்பகுதிக்குட்பட்ட காலத்தொடர் தரவுகளைக் பயன்படுத்தி விபரணப் புள்ளிவிபரவியல் முறையில் மேற் கொண்ட ஆய்வில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தேர்ச்சியற்ற தொழிலா ளர்கள் குடி பெயர்வதனால் நாட்டிற்கு அதிகளவு வருமானம் கிடைப்பதாகவும் அதேவேளை தொழிலுக்காக குடி பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்பங் களின் வாழ்வாதாரம் அதிகரித்து சமூக ஏற்றத்தாழ்வு குறைவடைந்துள்ள தாகவும், இத்தொழிலாளர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பல பிரச்சினை களை எதிர்நோக்குவதாகவும் இவ் வாய்வு கண்டறிந்துள்ளது.

ஜினதாச (1999) வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் மூலம் பொரு ளாதாரத்திற்குக் கிட்டும் அனுகூலங் களைக் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு ஒரு ஆய்வினை மேற் கொண்டுள்ளார். இவ்வாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை பயன்படுத்தி விபரணப் புள்ளிவிபரவியல் வரைபட முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு இலங்கையின் பொருளா தாரத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒரு பிராதான இடம் வகிப்பதாகவும் அது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் காரணிகளில் ஒன்றாகக் காணப்படுவதாகவும் இத்துறையை வளர்ப்பதற்கு ஆட்சியில் உள்ள அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றது.

இதேவேளை Aslam and Jesmy (2014) என்பவர்கள் மத்திய கிழக்கு வேலை வாய்ப்பினால் அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசத்தத்தில் ஏற்பட்ட சமூக – பொருளாதாரத் தாக்கங் களைக் கண்டறிந்து கொள்வதற்காக 1983 – 2013ம் ஆண்டுகளுக் கிடைப்பட்ட காலத்தொடர் தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் வில்கொக்ஸன் குறியீட்டுச் சோதனை, கைவர்க்க சோதனை மற்றும் பிற்செலவுப் பகுப்பாய்வு முறைகள் என்பன பகுப்பாய்வு நுட்பங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நுட்பங்களைப் பயன்படுத்தி பெறப்பட்ட முடிவுகளின்படி மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு ஆய்வுப் பிரதேசத்தில் பல்வேறு வகையான சமூகப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத் தியுள்ளமையை இவ்வாய்வு புள்ளி விபரவியல் ரீதியாக உறுதிப்படுத்தி யதுடன், மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆய்வுப் பிரதேசத்திலிருந்து சென்றவர் கள் அனுப்பிய தனியார் மாற்றல்கள் மொத்த தனியார் மாற்றல்களில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. மேலும் Aslam and Sharifdeen (2015) கடல்கடந்த நாடுகளில் தொழில்புரியும் இலங்கை யர்கள் அனுப்பும் தனியார் மாற்றல்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் எவ் வாறான தாக்கத்தினை ஏற்படுத்தி யுள்ளது என்பதனைக் கண்டறிந்து கொள்வதற்காக 1970 – 2013 ஆண்டு களுக்கிடைப்பட்ட காலத் தொடர் தரவுகளைப் பயன்படுத்தி ஆக்மன்டட் ஏன்கல் கிரங்கர் சோதனை முறையினை அடிப்படை யாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில்

இலங்கையின் பொருளாதாரத்தில் கடல் கடந்த நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் அனுப்பும் தனியார் மாற்றல்கள் பொருளுள்ள வகையில் நேர்த்தாக்கத்தினை செலுத்தி யுள்ளமை கண்டறியப்பட் டுள்ளது.

இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ள அனைத்து ஆய்வுகளும் விபரணப் புள்ளிவிபரவியல் முறையினையும் மற்றும் எளிய பிற்செலவுப் பகுப்பாய்வு நுட்பங்களையும் பயன்படுத்தியே மேற் கொள்ளப்பட்டுள்ளன. எனினும் Aslam and Jesmy (2014); Aslam and Sharifdeen (2015) என்பவர்களது ஆய்வுகள் மட்டும் வரையறுக்கப்பட்ட அனுமானப் புள்ளிவிபரவியல் நுட்பங் களைக் கையாண்டு மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும் எந்தவொரு ஆய்வாளரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு இலங்கையின் பொருளா தாரத்தின் மீது கொண்டுள்ள தாக்கத் தினை பற்றி பல்மாறிகளைக் கொண்டு ஆராயவில்லை. எனவே இந்நிலைமை ஆய்வொன்றின் தேவையை உணர்த்தி யுள்ளதனால் அதனை ஆய்விடை வெளியாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**பெருபேறுகளும் கலந்துரையாடலும்**

- **மாறிகளின் சுருக்கப் புள்ளிவிபரங்கள்**

ஆய்வில் கவனத்திற் கொள்ளப் படுகின்ற மாறிகளின் பொதுவான தன்மை பற்றி அறிந்து கொள்வதற்காக அம்மாறிகளின் சுருக்கப்புள்ளி விபர ங்கள் கவனத்திற் கொள்ளப் படுகின்றன. அந்தவகையில் அட்ட வணை 01 இவ்வாய்வில் கவனத்திற் கொள்ளப்படும் மாறிகளான வெளி நாட்டு வேலைவாய்பினால் இலங்கை பெற்றுக் கொண்ட தனியார் மாற்றல் கள், மற்றும் கட்டுப்பாட்டு மாறிகளான சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கப் பெற்ற கிடைப்பனவுகள், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண், நிலையான விலைகளில் கணிப்பிடப் பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றின் சுருக்கப் புள்ளி விபரங்களை கலந்துரையாடுகின்றது.

அட்டவணை 01 இல் ஐந்து மாறிகள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. இம் மாறிகளை நோக்கும்போது உயர்ந்த இடைப்பெறுமதியை மொத்த உள் நாட்டு உற்பத்தி (GDP) என்ற மாறியும் குறைவான இடைப் பெறுமதியை கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (CCPI) என்ற மாறியும் கொண்டுள்ளது. மறுபுறம் குறைவான நியம விலகலை கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்ற மாறியே பெற்றுள்ளது. இதே வேளை இழிவுப் பெறுமதியை சுற்றுலாத்துறை மூலமான கிடைப்பனவு (TE) என்ற மாறியும் உயர்வுப் பெறுமதியை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்ற மாறியும் கொண்டுள்ளன.

- **அலகு மூலச் சோதனை**

இவ்வாய்வில் கவனத்திற் கொள்ளப் படுகின்ற மாறிகளின் நிலையான (stationarity) தன்மையை அறிந்து கொள்வதற்காக அம்மாறிகள் ஒவ் வொன்றும் தனித்தனியாக ADF பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளை அட்ட வணன 02 காட்டுகின்றது.

இங்கு: C என்பது நிலையான பெறும தியையும்,C மற்றும் T என்பது நிலையான பெறுமதியையும் நேரத் தினையும்,C மற்றும் T* என்பது நிலையான பெறுமதி மற்றும் நேரத்தினை உள்ளடக்காமலும் காணப்படுகின்றது.

இங்கு கவனத்திற் கொள்ளப்படுகின்ற மாறிகளில் மூன்று மாறிகள் சுயாதீன நிலையிலும் (level form) மற்றைய மாறியான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் முதலாவது வேறு

பாட்டிலும் 5% பொருளுண்மை மட்டத்தில் நிலையான தன்மையினை (stationarity) அடைந்து கொள்கின்றன.

- **மாறிகளுக்கிடையிலான நடத்தை**

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமிடையிலான நடத்தையை அறிந்து கொள்வதற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு பொருத்தப்பட்ட பிற்செலவுச் சார்பு பின்வருமாறும் அதன் பெபேறுகளை அட்டவணை 03ம் காட்டுகின்றது

$$log\ GDP_t = 8.402961 + 0.834510 logFE_t - 0.977182 logCCPI_t + 0.059046 logTE_t$$

அட்டவணை 03 இல் மாறிகளுக் கிடையிலான துணிவுக்குணகம் ($R^2$) 0.9924ஆகக் காணப்படுகின்றது. எனவே பொருத்தப்பட்ட மாதிரியுருவின் துணிவுக்குணகம் 50% ஐ விட அதிகமாக காணப்படுவதனால் இம் மாதிரியுரு சிறப்பாகப் பொருத் தப்பட்டுள்ளது. எனினும் டேர்பின் வட்சன் புள்ளிவிபரம் (Durbin Watson statistics) 1.198 ஆகக் காணப்படுகின்றது. எனவே மாறிகளுக் கிடையிலான துணிவுக் குணகத் தினைவிட டேர்பின் வட்சன் பெறுமதி அதிகமாகக் காணப்படுவதனால் பொ ருத்தப்பட்ட மாதிரியுரு (Fitted Model) பெறுமதியற்ற பொருத்தப்பாட்டைக் (Dubious estimation) கொண்டிருக் கவில்லை.

மறுபுறம் மாறிகளின் நடத்தையை நோக்கும் போது இங்கு கவனத்திற் கொள்ளப்படுகின்ற சாரா மாறிகளில் சுற்றுலாத்துறை மூலமான வருமானம் தவிர்ந்த ஏனைய மாறிகளான வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பன சார்ந்த மாறி மொத்த உள்நாட்டு உற்பத்தி மீது பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் நேர்த் தொடர்பினைக் கொண்டுள்ளது. பொருத்தப்பட்ட பிற்செலவு மாதிரி யுருவில் குறித்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்ற மாறி (FE) 0.834510 என்ற குணகப் பெறுமதியையும் 16.743 என்ற அளவான t பெறுமதியையும் கொண்டு காணப்படுவதுடன் இம்மாறி 1% க்கும் குறைவான நிகழ்வுப் பெறுமதியையும் கொண்டுள்ளது. எனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற மாறி பொருளாதார வளர்ச்சியுடன் 1% பொருளுண்மை மட்டத்தில் செயற்றிறன் உள்ள மாறியாகக் காணப்படுகின்றது.

பொருத்தப்பட்ட மாதிரியுருவில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் என்ற மாறி மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் எதிர்த் தொடர்பினை பேணிக்கொள்கின்றது. அந்தவகையில் இம்மாறி மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (-0.977182) என்ற குணகத்தினையும் 55.286 என்ற t பெறுமதியினையும் கொண்டு காணப்படுவதுடன் 1% பொருளுண்மை மட்டத்தில் செயற்றிறன் வாய்ந்த மாறியாகவும் காணப்படுகின்றது.

மறுபுறம் சுற்றுலாத்துறை மூலமான கிடைப்பனவு என்ற மாறி பொருத்தப்பட்ட பிற்செலவுச் சார்பில் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் நேர்த் தொடர்பினைக் கொண்டிருந் தாலும் இக்காரணி புள்ளிவிபரவியல் ரீதியாக பொருளுண்மையற்றதாகக் காணப்படுகின்றது. ஏனெனில், இம்மாறி பொருத்தப்பட்ட பிற்செலவுச் சார்பில் மிகவும் குறைவான t பெறுமதி 0.0572 ஐயும் மிகவும் அதிகமான நிகழ்தகவுப் பெறுமதி 0.3099 ஐயும் கொண்டு காணப்படுகின்றது. எனவே இம்மாறி பொருளற்ற மாறியாகக் காணப் படுகின்றது.

**முடிவுரையும் சிபாரிசுகளும்**

பொருளாதார வளர்ச்சி மீது வெளி நாட்டு வேலைவாய்ப்பு நேர்க்கணியத் தொடர்பினைப் பேணிக்கொள்வதுடன் அது புள்ளிவிபரவியல் ரீதியாக பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்தும் மாறியாகவும் காணப்ப டுகின்றது. மேலும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியினைத் தீர்மா னிக்கும் காரணிகளில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஒரு முக்கிய காரணி யாக காணப்படுவது ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கொள்கை வகுப்பவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பொருளாதார வளர்ச்சியின் ஒரு அங்கமாக கருத்திற் கொண்டு கொள்கைகளை வகுப்பதன் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பினூடாக மேலும் அதிகளவில் நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக பின்வரும் நடவடிக் கைகளை கொள்கை வகுப்பாளர்கள் கவனத்திற் கொள்வது சிறப்பானதாக அமையும்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஒரு தேசிய அபி விருத்திக் கொள்கையை வடிவ மைத்து அதன் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை ஊக்குவிக்க முடியும்
- தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய் வதற்குப் பதிலாக தேர்ச்சியுள்ள தொழிலாளர்களை வெளிநாடுக ளுக்கு தொழில் வாய்ப்பு களுக்காக அனுப்புவதற்கான நட வடிக்கைகளை ஏற்படுத்துவதன் மூலம் வெளிநாடுகளில் தொழிலா ளர்களின் மீது பிரயோகிக்கப்படும் எதிர் சமூகப் பொருளாதார விளை வுகளை குறைத்துக் கொள்ளலாம்.
- தொழிற்றிறன் உள்ள தொழிலா ளர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பயிற்சி நிலையங்களை உருவாக்கி திற னற்ற தொழிலாளர்களை திறனுள் ளவர்களாக மாற்றுவதன் மூலம் அதிகளவு நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம்.
- சமூகவியல் ரீதியாக தொழிலா ளர்கள் வெளிநாடுகளில் எதிர்நோ க்கும் பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்காக திட்டங்களை வகுத்து தொழிலாளர்களின் சமூக வியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சித்தல் வேண் டும் இதன்மூலம் தொழிலாளர் களை வெளிநாடுகளுக்குச் செல்வ தற்கான ஊக்குவிப்பினை மேற் கொள்ளமுடியும்.
- பதிவு செய்த முகவர்கள் மூலம் தொழிலாளர்களை வெளி நாடு களுக்கு வேலைவாய்ப்புக்கு அனு ப்புவதன் மூலம் அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி கொள்ள முடிவதுடன் பதிவு செய்யாத முகவர்கள் மீது இறுக்கமான சட்டங்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்மூலம் வெளி நாட்டு தொழிலாளர்களின் பாது காப்பினை உறுதிப்படுத்திக் கொ ள்ள முடியும்.

**உசாத்துணைகள்**

Gujarati, D.N. (1995).Basic Econometrics, 3rd Edition. *McGraw – Hill, Inc, New Delhi, India.*

Iqbal, Z. & Sattar, A. (2005). The Contribution of Workers' remittances to Economic Growth in Pakistan. *Pakistan Institute of Development Economics, Research report 187.*

Mohamed Aslam, A.L & Jesmy, A.R.S.(2014). Socio- economic impact of Midle east employment with reference of costal area of Ampara

District.*Journal of Social Review, Department of Social Sciences, South Eastern University of Sri Lanka, 3(1),18 - 26.*

Mohamed Aslam, A. L. & Ahamed Lebbe, S. M. (2015). The relationship between money stock and economic growth of Sri Lanka: An AEG testing approach. *5th international symposium – 2015 at South Eastern University of Sri Lanka, 290-292.*

Mohamed Aslam, A.L & Sharifdeen, A.L (2015). The impact of remittances of overseas workers on Sri Lankan economy. *4th Annual International Research Conference, Faculty of Management and Commerce, South Eastern University of Sri Lanka.*

Rahman, M., Mustafa, M., Islam, A., & Guru – Gharana, K. K. (2006). Growth and employment empirics of Bangladesh. *The Journal of Developing Area, 99-114.*

Sarvananthan, M. (2005). Macroeconomic Overview, In Economic Reforms in Sri Lanka: Post 1977 Period. *International Centre for Ethnic Studies, Colombo.*

Siddique, M., Selvanathan, E. A. & Selvanathan, S. (2010).Remittances and Economic Growth: Empirical Evidence from Bangladesh India and Sri Lanka. *University of Western Australia, Business School of Economics.*

அத்தனநாயக்க, ச. (1996). வெளி நாட்டு வேலைவாய்ப்புக்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேர்ச்சியற்ற குடியகழ்வு. *பொருளியல் நோக்கு, ஜனவரி, மக்கள் வங்கி, இலங்கை.*

மத்திய வங்கி ஆண்டறிக்கை, (2013). இலங்கை மத்திய வங்கி பதிப்பகம், கொழும்பு, இலங்கை

சுவாமி, கு. (1983). *வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் பண அனுப் பீடுகள்.பொருளியல் நோக்கு - டிசம்பர், மக்கள் வங்கி, இலங்கை.*

ஜினதாச, எம். (1999). வெளி நாடுகளில் வேலை செய்பவர்கள் மூலம் பொருளா தாரத்திற்குகிட்டும் அனுகூலங்கள்.*பொருளியல் நோக்கு, ஆகஸ்ட் - ஒக்டோபர், மக்கள் வங்கி, இலங்கை.*

**அட்டவணை 01: மாறிகளின் சுருக்கப் புள்ளிவிபரங்கள்**

| மாறிகள் | அவதானங்கள் | இடை | நியம விலகல் | இழிவுப் பெறுமதி | உயர் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| **GDP** | 38 | 638535.9 | 1360605 | 17916.83 | 5037091 |
| **FE** | | 161813.7 | 245656.6 | 2218.00 | 916344 |
| **CCPI** | | 1422.356 | 1407.848 | 363.100 | 322579.0 |
| **TE** | | 34404.77 | 64045.35 | 162.90 | 5416.10 |

மூலம்: இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து கணிப்பிடப்பட்டவை

**அட்டவணை 02: ADF பரிசோதனைப் பெறுபேறுகள்**

| மாறிகள் | Level | | | 1st Difference | | |
|---|---|---|---|---|---|---|
| | C | C and T | C and T* | C | C and T | C and T* |
| **GDP** | 2.712303 | 2.241865 | 3.786797* | 0.032850 | 2.979167 | 0.950433 |
| **FE** | 4.1286* | 4.283253* | 7.6259* | 5.078424 | 4.411478 | 5.271069* |
| **CCPI** | 1.9947 | -1.801585 | -1.349577 | -6.44581* | -6.478382* | -6.539686* |
| **TE** | 3.73596* | 4.010397* | 3.578682* | 2.423631 | 1.705328 | 2.507398* |

மூலம்: இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து கணிப்பிடப்பட்டவை

**அட்டவணை 03: மாறிகளுக்கிடையிலான நடத்தையினை விளக்கும் பிற்செலவுச் சார்பின் பெறுபேறுகள்**

| மாறிகள் | t – புள்ளி விபரம் | நியம வழு | நிகழ்தகவுப் பெறுமதி | துணிவுக் குணகம் ($R^2$) |
|---|---|---|---|---|
| **C** | 54.919 | 0.553 | 0.0000 | 0.9924 |
| **FE** | 16.743 | 0.049 | 0.0000 | D. W = 1.198 |
| **CCPI** | 55.286 | 0.0176 | 0.0000 | |
| **TE** | 1.0308 | 0.0572 | 0.3099 | |

மூலம்: இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து கணிப்பிடப்பட்டவை